/ /

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்
OS.No.5/2020

2023-ம் ஆண்டு மார்ச் திங்கள் 16-ம் நாள் இந்திய ஆணையுறுதி சட்டம் பிரிவு 3 மற்றும் 4-ன் படி வாதி / பிரதிவாதி என்பவரை சாட்சியத்தின் வாக்குமூலம் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மோசஸ்(Pw1) | த/பெ. | : | |
| கிராமம் | : | | தாலுகா | : | |
| சமயம் | : | | ஜாதி | : | |
| வயது | : | | தொழில் | :: | |

நாள். 16.03.2023
வா.சா.1
குறுக்கு விசாரணை:

1. தாவா சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியம் என்றால் அலசு அந்தோனிக்கு பாத்தியமாகும். அலசு அந்தோனிக்கு முன்பு யாருக்கு பாத்தியம் என்றால் எனக்கு தெரியாது.அலசு அந்தோனிக்கு முன்பு குப்புபிச்சைக்கு சொத்து பாத்தியமானது என்றால் சரிதான். குப்புபிச்சையின் மக்கள் மாணிக்கவாத்தியார், அருளப்பன், ஞானபிரகாரசம், பிலவேந்திரன், ராயப்பன் ஆகியோர்கள் ஆவார்கள்.குப்புபிச்சை தாவா சொத்தை அலசு அந்தோனியிடம் ஒத்தி வைத்து மீட்கமுடியாமல் கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் அது எனக்கு தெரியாது. அதன்பின்பு அலசு அந்தோனி கிரையம் வாங்கிய பின்பு 12.02.1951-ல் ஒரு பாகப்பிரிவினை பத்திரம் போட்டுள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது. அலசு அந்தோனிக்கு எத்தனை மக்கள் என்றால் சந்தியாகப்பன், ஜெபமாலை, அருளானந்தம் ஆகியோர்கள் ஆவார்கள். அவர்களில் 1951-ம் வருடம் யாரும் இறந்துவிட்டார்களா என்றால் எனக்கு தெரியாது. 12.02.1951ல் அலசு அந்தோனி மக்கள் எல்லாரும் சேர்ந்து ஒரு பாகப்பிரிவினை பத்திரம் ஏற்படுத்தினார்கள் என்றால் எனக்கு தெரியாது. அந்த பாகப்பிரிவினை பத்திரத்தில் சந்தியாகப்பனின் மூத்த மகன் ஜெபமாலை முதல் பார்டியாகவும்,2வது மகன் மைகேல் சாமி 2வது பார்டியாகவும், அவரின் மனைவி மரிய நட்சத்திரம் 3வது பார்டியாகவும், ஜெபமாலை மக்களான பரதலோமை 4வது பார்டியாகவும்,அவருடைய தம்பி மோட்சானந்தம் 5வது பார்டியாகவும், அவருடைய தம்பி மைனர் மரியசெல்வம், இன்னாசிமுத்து 6, 7வது பார்டியாகவும், அவர்களின் தாயாரான கிரேஸ்அம்மாள், 6,7 பார்டிகளுக்ககாவும், 8வது பார்டியாகவும் கையொப்பம் இட்டுள்ளார். அருளானந்தத்திற்காக அவரது மைத்துனர் ஜேசு ஜெபஸ்தியான் 9வது பார்டியாகவும், தாவா சொத்து உட்பட இதர சொத்துக்களுக்கு சேர்த்து 12.02.1951-ல் பாகப்பிரிவினை பத்திரம் ஏற்படுத்தியுள்ளார்கள் என்றால் தெரியாது.

2. அந்த பாகப்பிரிவினை பத்திரத்தில் சர்வே எண். 66, மற்றும் 77 க்கு உண்டான சொத்து விஸ்தீரணம் 10 ஏக்கர் 74 செண்டை அலசு அந்தோனி மக்கள் மூன்று பேரும் மூன்று பாகங்களாக பிரித்துக்கொண்டார்கள் என்றால் தெரியாது. அதனடிப்படையில் மூன்று மக்களுக்கும் தலா 3 ஏக்கர் 58 செண்ட் பாத்தியம் என்றால் எனக்கு தெரியாது. நான் பிராதில் ஜெபமாலை மகன் ஜேசு ஜெபஸ்தியான் என்பவரிடமிருந்து எனது தகப்பனார் இன்னாசிமுத்து மற்றும் அவரது அண்ணன் மோட்சானந்தம் ஆகியோர்கள் 2 ஏக்கர் 11.33 செண்ட் இடத்தை கிரையம் வாங்கியதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அது பதிவு செய்த பத்திரம் என்றால் சரிதான். அந்த பத்திரத்தில் அதற்கு முன்பு சொத்து யாருக்கு பாத்தியப்பட்டது எப்படி வந்தது என்ற எந்த விபரமும் இல்லை என்றால் சரிதான். பிராதில் 6 ஏக்கர் 46 செண்டில் அ.ஜெபமாலைக்கு 1 பங்கும், ச.ய. ஜெபமாலைக்கு 1 பங்கும் நீக்கி, மேற்படியார் கிரையம் பெற்றதாக எதை வைத்து சொல்கிறேன் என்றால் கிரைய ஆவணத்தை வைத்து சொல்கிறேன். வா.சா.ஆ-1 ஆவணத்தில் 6 ஏக்கர் 46 செண்ட் நிலம் என்று தான் உள்ளது அதில் 2/3 பங்கான 2 ஏக்கர் 15.33 செண்ட் என்று இல்லை என்றால் சரிதான். அந்த பத்திரத்தில் சர்வே எண்.66/2 என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சர்வே எண்ணில் அலசு அந்தோனிக்கு 10 ஏக்கர் 74 செண்ட் பாத்தியம், அதன்பின்பு அவர் மக்களுக்கு இடையில் ஏற்பட்ட பாகப்பிரிவினையில் ஒவ்வொருவருக்கும் 3 ஏக்கர் 58 செண்ட் பாத்தியம் ஏற்பட்டுள்ளது என்றும், அதனை காட்டக்கூடிய ஆவணமான 12.02.1951ல் ஏற்பட்ட பாகப்பிரிவினை பத்திரத்தை தாக்கல் செய்தால் தெரிந்துவிடும் என்பதால் அதை மறைத்து தற்போது எனக்கு தெரியாது என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

3. தாவா சொத்தின் சர்வே எண்.66/2 என்றால் சரிதான். அந்த சொத்திற்கு எந்த திசையில் சர்வே எண். 77 உள்ளது என்றால் தெற்கே உள்ளது. 7, 8 பிரதிவாதிகள் இடத்திற்கு தெற்கே ஸ்டான்சி ஜோன் இடம் உள்ளது, அதற்கு தெற்கே தான் சர்வே எண். 77 உள்ளது என்றால் இல்லை. சர்வே எண். 77ன் விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 4 ஏக்கராகும். 4 ஏக்கரும் அலசு அந்தோனியின் மக்களான அந்தோனி, இன்னாசிமுத்து ஆகியோர்கள் கைவசம் உள்ளது என்றால் சரிதான். ஜெபமாலையின் வாரிசுகளான 7 பேர்களில் இரண்டு பேர்கள் இறந்துவிட்டார்கள் என்றால் சரிதான். அலசு அந்தோனியின் மகனான ஜெபமாலையின் வாரிசுகள் சந்தியடிமை, மரியகிருபால், இன்னாசிமுத்து, பர்தலோமை, மோட்சானந்தம், மரியசெல்வம், மங்களம் ஆகியோர்கள் ஆவார்கள். அவர்களில் மரிய செல்வமும், மங்களமும், வாரிசுகள் இல்லாமல் இறந்துவிட்டார்கள். எனவே, ஜெபமாலைக்கு 5 நபர்கள் தான் வாரிசு என்றால் சரிதான். அதனால் எனது பிராதில் 7 நபர்கள் வாரிசுகள் என்று சொன்னால் அது தவறு என்றால் அவர்களும் வாரிசுதான். இறந்துபோனவர்களின் பாகம் ஜெபமாலையின் மற்ற வாரிசுகளுக்கு தான் என்றால் சரிதான். பொதுவாக ஒரு சொத்தை அடைந்து அனுபவித்து வந்தால் தான் பட்டா மாற்றமுடியும் என்றால் சரிதான். அதனடிப்படையில் 1 முதல் 8 பிரதிவாதிகளுக்கும் தாவா சொத்தில் பட்டா கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான்.1956ம் வருடம் கிரைய பத்திரத்தின் படி ஒதுக்கப்பட்ட

சொத்தின் படி 7 பங்கிள் வெறும் 30.76 செண்ட் சொத்து என்று வா.சா.ஆ-1 பத்திரத்தில் சொல்லியுள்ளதா என்றால் இல்லை.

3. எனது தகப்பனார் இன்னாசி முத்து வாரிசுகள் மரிய வின்செண்ட், நான், மரிய சிங்கராயன், சந்தியாராயப்பன், ஜெசிந்தா,திரேசம்மாள், செலின்மேரி ஆகியோர்கள் ஆவார்கள். எனது பெரியப்பா மோட்சானந்தத்தின் வாரிசுகள் ஜெயராஜ், சேவியர் பிதலிஸ், ஜார்ஜ் ஜனாதிபதி, ஜோசப் ஜோன்சால், பிரமிளா ஆகியோர்கள் ஆவார்கள்.இந்த வழக்கை நான் இன்னாசி முத்து மற்ற மக்கள்களும், மோட்சானந்தத்தின் மக்கள்களுக்காவும் தாக்கல் செய்துள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதற்கு அவர்களிடமிருந்து எழுத்து மூலமாக பவர் ஆவணம் எதுவும் எழுதி வாங்கியுள்ளேனா என்றால் இல்லை. அவ்வாறு எழுத்து மூலமாக எழுதி வாங்காததால் தாவா சொத்தில் எனக்குரிய பங்கினை பொறுத்து மட்டும் தான் வழக்கு தாக்கல் செய்யமுடியும். எல்லாருடைய பாகத்தை பொறுத்தும் வழக்கு தாக்கல் செய்யமுடியாது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் 1 முதல் 6 பிரதிவாதிகள் தான் சுத்தி கம்பி வேலி அமைத்து பராமரித்த வருகிறார்கள் என்றால் சரியல்ல. அதேபோல் 7, 8 பிரதிவாதிகள் சொத்தை சுத்தி கம்பி வேலி அமைத்து பராமரித்த வருகிறார்கள் என்றால் சரியல்ல. 10.05.1999-ம் தேதி பர்தலோமைக்கு பாத்தியப்பட்ட 1 ஏக்கர் 76 1/2 செண்டில் 10 செண்டை மட்டும் இராமேஸ்வரம் காமராஜர் நகரில் உள்ள டேவிட் மகன் ராஜனுக்கு அடமானம் வைத்துள்ளார் என்றால் சரிதான்.அதை 13.03.2000-ம் வருடத்தில் திருப்பிவிட்டார் என்றால் சரிதான். 13.03.2000-ம் வருடத்திற்கு பின்பாகவும், தற்போது வரையும் 1951-ம் ஆண்டு முதல் 10.05.1999 வரை 1 ஏக்கர் 76 1/2 செண்டை இந்த பிரதிவாதிகள் தான் கைவசம் வைத்து அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். அதனால் தான் பிரதிவாதிகள் பெயரில் தனித்தனி பட்டாவாக வா.சா.ஆ-2 பட்டா வழங்கியுள்ளார்கள் என்றால் சரியல்ல. பர்தலோமையின் மக்களான 1 முதல் 6 பிரதிவாதிகள் தாவா சொத்தை பகுதி பகுதியாக பிரித்து இனாம் செட்டில்மெண்ட் எழுதிவைத்துள்ளார்கள் என்றால் சரிதான். அதனடிப்படையில் 1 முதல் 6 பிரதிவாதிகளுக்கு பட்டா ஏற்பட்டு வரி பதிவு செய்து அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். மேற்படி இனாம் செட்டில்மெண்ட பத்திரத்தை ரத்து செய்யகோரி நான் எந்தவித பரிகாரமும் கேட்கவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து என்னுடைய அனுபவத்தில் இல்லாததால் திரும்ப ஒப்படைக்க சுவாதீனம் பரிகாரம் கோரமுடியாது விளம்புகை பரிகாரம் தான் கோர வேண்டும் என்றால் சரியல்ல. தாவா சொத்தை 1 முதல் 6 பிரதிவாதிகள் சட்டப்படியாக அனுபவம் செய்து வருகிறார்கள் எனவே வழக்கு காலாவத தோசத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு வடக்கே எனக்கு 92 செண்ட் கைவசம் உள்ளது என்றால் 90 செண்ட் உள்ளது. வழக்கு பிராதில் பாரா 5 ல் மொத்த சொத்தும் பிரிவு படாமல் இருந்து வரும் நிலையில் அலசு அந்தோனியின் வாரிசுகளான மூன்று நபர்களுக்கும் 6 ஏக்கர் 46 செண்ட் அதில் தலா 15.33 செண்ட் என்றும், அதில் ஜெபமாலையின் வாரிசுகளான 7

பேர்களுக்கு தலா 30.76 செண்ட் என்று எதை வைத்து சொல்லியுள்ளேன் என்றால் தெரியாது. நான் சொல்வது போல் தாவா சொத்து பிரிவினை செய்யாப்படாமல் இருந்துவருவதால் பாகப்பிரிவினை கேட்டு தான் வழக்கு தாக்கல் செய்யவேண்டும் என்றால் சரிதான். எனது தகப்பனார் இன்னாசி முத்து, எனது பெரியப்பாவான மோட்சானந்தம் என்பவருக்கும் 12.02.1951 ல் ஏற்பட்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் படி சர்வே எண். 66/2 ல் தாவா சொத்திற்கு வடக்கே 95 செண்டும், சர்வே எண். 77 ல் 4 ஏக்கர் அனுபவம் செய்து வருகிறேன் என்றால் சரிதான். தாவா சொத்தை பொறுத்து பாகப்பிரிவினை ஏற்பட்டும், எனது பெரியப்பா பர்தலோமையின் மக்களான 1, 2 பிரதிவாதிகளை அலக்கழிக்க வைக்கவேண்டும் என்ற எண்ணத்தில் தாக்கல் செய்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ-3 முதல் 7 ஆவணங்கள் அனைத்தும் பின்னிட்டு வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணங்கள் என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.